வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 370/ஆ1/2024 நாள் 06.02.2024

பொருள் : பள்ளிக்கல்வி – அனைத்து அரசு பள்ளிகளில் ஆண்டு விழா நடத்த தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குதல் – சார்பு

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.241 பள்ளிக்கல்வி (ப.க.5(1) துறை நாள்.
2.பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறையின் ந.க.எண். 45428/எம்/இ2/2023 நாள்.31.01.2024

---

பார்வை 2இல் காணும் செயல்முறைகளில் அனைத்து அரசு பள்ளிகளிலும் கல்வி மற்றும் கல்விசார் செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பினை ஆண்டு இறுதியில் மாணவர்கள் தம் பெற்றோர்கள் முன்னிலையில் திறன்களை வெளிப்படுத்த ஏதுவாக ஆண்டு விழா கொண்டாட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர்களின் தனித்திறன்களை சிறப்பாக வெளிப்படுத்த பள்ளி மேலாண்மைக் குழுவுடன் இணைந்து எந்தவிதமான புகாருக்கும் இடமளிக்காமல் ஆண்டு விழாவினை சிறப்பாக 10.02.2024க்குள் நடத்தி புகைப்படத்துடன் கூடிய அறிக்கையினை 14.02.2024க்குள் அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலை) அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் மேலே தெரிவிக்கப்பட்ட ஆண்டு விழாவினை நடத்தி தொகுப்பறிக்கையினை 14.02.2024க்குள் இவ்வலுவலகம் அனுப்பி வைக்க மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : பார்வையில் காணும் செயல்முறைகள்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்கள்
அனைத்த உயர்/மேல்நிலைப் பள்ளி
வேலூர் மாவட்டம்.

நகல்.
1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) – தொடர் நடவடிக்கையின் பொருட்டு
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) – தொடர் நடவடிக்கையின் பொருட்டு